# இரண்டாம் மொழி
# தமிழ்

# 11
## தரம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2016 ஆம் ஆண்டிலிருந்து
நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)



தமிழ் மொழித்துறை
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம,
ஸ்ரீலங்கா

# இரண்டாம் மொழி
# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 11

(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது)

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

# இரண்டாம் மொழி

# தமிழ்

## ஆசிரியர் வழிகாட்டி

# தரம் 11

**(2016 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.)**

தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
ஸ்ரீலங்கா
இணையத்தளம் : **www.nie.lk**

இரண்டாம் மொழி - தமிழ்
ஆசிரியர் வழிகாட்டி
தரம் - 11

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2015
தேசிய கல்வி நிறுவகம்

தமிழ்மொழித் துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
ஸ்ரீலங்கா.

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

பதிப்பு : தேசிய கல்வி நிறுவகம்

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2016 ஆம் ஆண்டிலிருந்து தரம் 7, 11 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்துப் பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும், அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

**பணிப்பாளர் நாயகம்**
**தேசிய கல்வி நிறுவகம்**

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைவதற்கும், நல்லவற்றைப் பயன்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டிகள், வசதி செய்து கொடுப்போர்(Facilitator) போன்றவையெல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும், பண்டைய அருஞ் செல்வங்களையும் கலக்கச் செய்து, தனது கல்விக் கோலத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை மாணவர்கள் அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,**
**தேசிய கல்வி நிறுவகம்.**

# அறிமுகம்

பல்லின, பன்மொழிப் பண்பாட்டுச் சூழலில் வாழும் மக்கள் தமக்கிடையே புரிந்துணர்வு, ஐக்கியம் என்பவற்றை வளர்த்துக் கொள்ளவும் பரந்த அறிவு, மனப்பாங்கு என்பவற்றை ஏற்படுத்திக் கொள்ளவும் மாற்றுச் சமூகங்களின் மொழிகளை அறிந்திருத்தல் பயன் மிக்கதாகும். இலங்கையைப் பொறுத்தவரையில் சிங்களமொழி பேசும் சமூகத்தவர் தமிழ் மொழியையும் தமிழ்மொழி பேசும் சமூகத்தவர் சிங்கள மொழியையும் கற்பது இரு சமூகங்களிடையிலும் புரிந்துணர்வையும் உறவையும் ஏற்படுத்த வழி செய்யும் பயன்மிக்க நடவடிக்கையாகும்.

அவ்வகையில் முதன்மொழியாகிய தாய்மொழி (சிங்களம் / தமிழ்), சர்வதேச மொழியாகிய ஆங்கிலம் என்பவற்றுடன் இரண்டாம் மொழியையும் (தமிழ் / சிங்களம்) கற்றல் - கற்பித்தல் அவசியம் என்பது தேசிய கல்விக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட தரம் - 11 க்கான “இரண்டாம் மொழி - தமிழ்” பாடம் 2016 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

மேலும், இப்பாடத்திட்டத்தில் மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்பவற்றில் தரம் - 11 மாணவர்கள் அடைய வேண்டிய தேர்ச்சிகள் தீர்மானிக்கப்பட்டு, அவற்றுக்கான தேர்ச்சி மட்டங்கள் படிமுறைப்படுத்தித் தரப்பட்டுள்ளன. ஆசிரியர், தேர்ச்சி மட்டங்களின் படிமுறை வளர்ச்சியைக் கருத்திற் கொண்டும் பொருத்தமான கற்பித்தல் உத்திகளைக் கையாண்டும் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ளல் வேண்டும். அத்தோடு தாம் கற்பிக்கும் வகுப்புக்கு முற்பட்ட வகுப்புகளின் பாடத்திட்டம் பற்றி அறிந்திருக்க வேண்டும். அது மட்டுமின்றி, ஒவ்வொரு வகுப்புக்கும் கற்பிக்கும்போதும் முன்னைய வகுப்புப் பாடத்திட்டங்களுடன் தொடர்புபட்ட விடயங்களை மீட்டுப் பார்ப்பதும் அவசியமாகும்.

அதற்கமைய “இரண்டாம் மொழி - தமிழ்” பாடத்தின் குறிக்கோள்களை நிறைவு செய்தவாறு தேர்ச்சிமிக்க இளஞ் சந்ததியினரை உருவாக்குவதற்கு வழிகாட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும். இந்நூல் தொடர்பாக உங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களையும் முன்மொழிவுகளையும் எமக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**பணிப்பாளர்.**
**தமிழ்மொழித்துறை,**
**தேசிய கல்வி நிறுவகம்.**

# கலைத்திட்டக்குழு

**ஆலோசனையும் அனுமதியும் :**

கல்விசார் அலுவல்கள் சபை
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட விடய ஆலோசனை :**

கலாநிதி. ஸ்ரீ. பிரசாந்தன்.
சிரேஷ்ட விரிவுரையாளர், ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.
கலாநிதி. உ.நவரத்னம்.
நிபுணத்துவ ஆலோசகர், ஜி.ஐ.இஸட்.
செல்வி. வ.விஜயலெட்சுமி.
பணிப்பாளர், தமிழ்மொழித் துறை.
திரு. சி. காண்டீபன்.
அபிவிருத்தி உதவியாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம் :**

திருமதி நா.சீதரன்.
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை.

**வளப்பங்களிப்பு :**

திருமதி. ப. சபாநாதன்.
ஆசிரியர், மேமா/லலித் அத்துலத்முதலி கல்லூரி, கல்கிஸ்ஸை.
திரு. ஆர். சதாத்.
ஆசிரியர், தி/தாருல் உலூம் ம.வி. கிண்ணியா.
திரு. வே. திருச்சபேசன்.
முகாமையாளர், ஆசிரிய மத்திய நிலையம், தீவகம், வேலணை.
செல்வி. ஜே. பாலரஞ்சனி.
மாகாணக் கல்வி அலுவலகம், மேல் மாகாணம்.
திரு. பொ. அசோக்குமார்
ஆசிரியர், மமா/நு/வ/டலோஸ் மகா வித்தியாலயம், உடப்புசல்லாவ.
திரு. க. சிவராஜ்.
ஆசிரியர், மமா/நு/வ/மடுல்ல மகா வித்தியாலயம், உடப்புசல்லாவ.

**மொழிச்செவ்விதாக்கம் :**

திருமதி. நா. சீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர், தமிழ்மொழித் துறை.

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

2007 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகளில் கலைத்திட்டத்தில் தொகுதிப் பாடங்களுள் ஒன்றாக இருந்துவரும் இரண்டாம் மொழி - தமிழ்ப் பாடம் 2015 ஆம் ஆண்டிலும் அதன் பின்னரும் அதேவிதமாக நடைமுறைப்படுத்தப்படும். 6-11 ஆந் தரங்களுக்காக வாரமொன்றுக்கு இரண்டு பாடவேளைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 10 -11 ஆம் தரங்களுக்குரிய பாடத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டை நடத்த எதிர்பார்க்கப்படுகின்றது.

6-11 ஆந்தரங்களுக்காக தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் படி பிரதானமாக கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து என்னும் நான்கு தேர்ச்சிகளின் கீழ் தரம் 11 க்கான இரண்டாம் மொழி - தமிழ்ப் பாடக்கலைத்திட்டம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. கலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது பாடத்திட்டம், பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் எனும் இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்துள்ளது.

'இரண்டாம் மொழி - தமிழ்' பாடத்தின் மூலம் மாணவரிடத்தே கட்டியெழுப்ப எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை விருத்தி செய்யும்போது பாடங்களும் அப்பாடங்களைப் பயிலுவதற்காகப் பயன்படுத்தும் முறையியல்களும் முக்கியமானவை. இவ் ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள **சொற்களஞ்சியம்** என்னும் பகுதி ஆசிரியர் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டை சிறப்பாக மேற்கொள்ள உதவியாக அமையும். இவ்வாறு செயற்பாடு சார்ந்த கற்றல் சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் மாணவர் பாடங்களைப் பயில்வதற்கு வழிப்படுத்துவதே இங்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

நூலாக்கக்குழு.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iii |
| 02 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி | iv |
| 03 | அறிமுகம் | v |
| 04 | வளப்பங்களிப்பு | vi |
| 05 | ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள் | vii |
| 06 | பாடத்திட்டம் | ix |
| 07 | கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல் | |
| | 1.0 கேட்டல் | 01 - 10 |
| | 2.0 பேச்சு | 11 - 22 |
| | 3.0 வாசிப்பு | 23 - 30 |
| | 4.0 எழுத்து | 31 - 42 |

# பாடத்திட்டம்

## 2.0 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக்கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போசிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**1. தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

**எழுத்தறிவு:** கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தரும் வகையிலான கருத்துப் பரிமாற்றம்.

**எண்ணறிவு:** பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

**சித்திர அறிவு:** கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல். விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

**தகவல் தொழினுட்பத் தகைமை:** கணிணி அறிவு - கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் ( ICT) பதிவு செய்தல்.

**2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்.**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு (சமூகம், உயிரியல், பௌதிகம்) தொடர்புறுகின்றன.

**சமூகச் சூழல்:** தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்றவகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

**உயிரியல் சூழல்:** வாழும் உலகு, மக்கள், உயிரியல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதிகச் சூழல்:** இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**4. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
- அவர்களது தொழில் விருப்பங்களையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

**5. சமயமும் ஒழுக்கலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

**6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வுநேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்

**7. கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக, மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 திசெம்பர்)**

# செவிமடுத்தல் / கேட்டல்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 1.0 நாளாந்த சந்தர்ப்பங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுகளுக்கு செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார். | 1.1 பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • பொலிஸ் அதிகாரியுடனான உரையாடல்<br>உம்: தயவுசெய்து, நன்றி | • சுமுகமான கலந்துரையாடல்களில் அதிகளவு சொற்களை விளங்கித் துலங்குவார். | 02 |
| | 1.2 அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • படகில் பயணம் செய்யும்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள். | • விபரங்களைக் கொண்ட அறிவுறுத்தல்களைக் கேட்டுக் கிரகித்துத் துலங்குவார். | 02 |
| | 1.3 வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | • விடுமுறைக் காலத்தைக் கழிக்க பொருத்தமான இடத்தை விசாரித்தல். | • அதிக தகவல்களைக் கொண்ட வழிநடத்தல் களை விளங்கித் துலங்குவார். | 02 |
| | [illegible] | • விளம்பரம் | • பாடத்துடன் தொடர்புடைய விளம்பரம் ஒன்றில் இடம்பெறும் அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். | 02 |
| | [illegible] / ஒலிநாடா ஒலிபரப்புக்களைச் | • நகைச்சுவைக்கதைகள் | • ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒலிபரப்புகளைச் செவிமடுத்துத் துலங்குவார். | 02 |

## பேச்சு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 பொதுவான விடயங்களில் வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார். | 2.1 அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார். | • வைத்திய ஆலோசனைக்குப் பதிவு செய்தல் | • தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள நீண்ட அறிவுறுத்தல்கள் மற்றும் விளக்கம் அளிக்கும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப உரையாடுவார். | 03 |
| | 2.2 வழிநடத்தல்களைப் பின்பற்றி உரையாட முன்வருவார். | • சுற்றுலாப் பயணத்திற்கு அனுமதிப் பத்திரம் பெறும் வழிகள் | • வழிநடத்தல்களில் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக கலந்துரையாட முன்வருவார். | 03 |
| | 2.3 நட்புரீதியாக உரையாடுவதற்கு முன்வருவார். | • விடுமுறையின்போது சென்ற சுற்றுலாப் பயணம் தொடர்பான கலந்துரையாடல் | • விபரமான சுமுக உரையாடலை ஆரம்பித்து வளர்த்துச் செல்வார். | 03 |
| | 2.4 தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக உரையாடுவார். | • தொலைந்த புத்தகம் பற்றிய தகவல்களை வினாவுதல் | • தகவல்களைப் பரிமாறுவதற்காக நட்புரீதியாக இணைந்து உரையாடுவார். | 03 |
| | 2.5 கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்காக உரையாடுவார். | | • பலவிதமான கொடுக்கல் வாங்கல்களில் கலந்து கொண்டு உரையாடுவார். | 03 |

## வாசிப்பு

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 3.0 நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய, அறிமுகமான, அறிமுகமற்ற ஆயத்தப்படுத்திய சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான | 3.1 கடிதங்களையும் வேறு படிவங் களையும் விளங்கி வாசிப்பார். | • தொழில் முறைக்கடிதம் | • ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டவற்றை விளங்கி வாசிப்பார். | 03 |
| | 3.2 இலக்கியங்களை விளங்கி வாசிப்பார். | • உரைப்பகுதி (இராமாயண உரைப்பகுதி) அனுமான் இலங்கைக்கு வந்த சந்தர்ப்பம்<br>• புதுவருடப்பிறப்பு | • இலக்கியப் பந்திகளிலுள்ள உள்ளடக்கங்களை விளங்கி, கிரகித்து வாசிப்பார். | 03 |
| | 3.3 அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார். | • வைத்தியர் வழங்கும் அறிவுறுத்தல்கள் | • அதிக விபரங்களைக் கொண்ட அறிவுறுத் தல்களை விளங்கி வாசிப்பார். | 03 |
| | 3.4 கட்புல, செவிப்புல சாதனங்கள் தகவல்களைப் பார்த்து விளங்கி வாசிப்பார். | • பத்திரிகைகளில் இடம்பெறும் தலைப்புச் செய்திகள் | • செவிப்புல, கட்புல சாதனங்களில் வரும் பிரதான கருத்துக்களையும் படங்களையும் விளங்கி வாசிப்பார். | |

## எழுத்து

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0 நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய, அறிமுகமான, அறிமுகமற்ற, ஆயத்தப்படுத்திய சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான | 4.1 விபரங்கள் உள்ளடங்கிய பந்திகளை எழுதுவார். | • மரங்களை நடுவோம்: பயன்பெறுவோம் (கட்டுரை) | • பல தலைப்புகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பந்திகளை எழுதுவார். | |
| | 4.2 ஆக்கபூர்வமான பந்திகளை எழுதுவார். | • சுற்றுலாப் பயணத்தின்போது கண்டுகளித்த ஓர் இடம் பற்றிய விபரம் (மிருகக் காட்சிச் சாலை) | • விபரமான ஆக்கபூர்வமான பந்திகளை எழுதுவார். | 04 |
| | 4.3 கடிதங்களை எழுதுவார். | • மிருகக் காட்சிச்சாலை பார்வையிட அனுமதி கோரி எழுதும் கடிதம். | • தொழில்முறைக் கடிதங்களை எழுதுவார். | |
| | 4.4 தகவல்கள் உள்ளடங்கிய சொற்றொடர்களையும் பந்திகளையும் எழுதுவார். | • துண்டுப் பிரசுரம் | • பல்வேறுபட்ட விபரங்க ளைக் கொண்ட பந்தி களை எழுதுவார். | 04 |
| | 4.5 விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்துவார். | | • செய்தித் தாளில் வெளியான தொழில் வாய்ப்புப் பற்றிய விபரம் ஒன்றை வாசித்துப் | |

# கற்றல் - கற்பித்தற்
# செயன்முறைக்குரிய வழிகாட்டல்

**தேர்ச்சி 1.0** : நாளாந்தத் தேவைகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : பண்பான உரையாடல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : பொலிஸ் அதிகாரியுடனான உரையாடல்

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள்** :

- உரையாடும்போது அவதானமாகச் செவிமடுப்பார்.
- புதிய சொற்களை அறிவதற்கு ஆர்வம் கொள்வார்.
- சுமுகமான கலந்துரையாடல்களின்போது சொற்களைப் பயன்படுத்தி முன்வைப்பார்.
- அன்றாடத் தேவைகளுக்காகப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்த முனைவார்.
- மேலதிகமான சொற்களை விளங்கித் துலங்குவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- தயாரிக்கப்பட்ட ஒலிப்பதிவு உரையாடல்களை மீண்டும் மீண்டும் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களை மீண்டும் மீண்டும் வாசித்துச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- உரையாடலில் வரும் புதிய சொற்களை அறிந்து, பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உரையாடல் செயற்பாடுகளை ஒழுங்கமையுங்கள்.
- எல்லா மாணவர்களும் பங்குபற்றிச் செயற்பட சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இடர்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| தயவுசெய்து | -කරුණාකර | பேருந்து | - බස් රථය |
| நன்றி | - ස්තූතියි | வேறு | - වෙනත් |
| தொலைந்துவிட்டது | - නැතිවිය | என்ன? | - මොකක් ද ? |
| அடையாள அட்டை | - හැඳුනුම්පත | எப்போது? | - කවදා ද ? |
| பதிவு | - ලියාපදිංචි | பாதை | - මාර්ගය |
| மாலை நேரம் | - සවස් කාලය | | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல் அட்டைகள்
- பாடநூல்
- ஒலிப்பதிவு நாடாக்கள்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

**பொலிஸ் அதிகாரியுடனான கலந்துரையாடல்.**

**முறைப்பாட்டாளர் :** ஐயா! வணக்கம்.

**பொலிஸ் (காவற்றுறை) அதிகாரி :** வணக்கம். உள்ளே வாருங்கள். உட்காருங்கள். என்ன விடயமாக வந்துள்ளீர்கள்?

**முறைப்பாட்டாளர் :** எனது தேசிய அடையாள அட்டை தொலைந்துவிட்டது. முறைப்பாடு செய்ய வந்துள்ளேன்.

**பொலிஸ் அதிகாரி :** எப்போது தொலைந்தது?

**முறைப்பாட்டாளர் :** இன்று காலை தொலைந்துபோய்விட்டது.

**பொலிஸ் அதிகாரி :** எங்கே தொலைந்தது?

**முறைப்பாட்டாளர் :** நூற்றி ஐம்பத்தி ஐந்தாம் இலக்க பேருந்திலிருந்து இறங்கும் போது தொலைந்திருக்க வேண்டும்.

**பொலிஸ் அதிகாரி :** என்ன நேரம்?

**முறைப்பாட்டாளர் :** காலை ஏழு மணிக்கும் எட்டு மணிக்கும் இடையில்.

**பொலிஸ் அதிகாரி :** இரண்டு நாள் பொறுத்துப் பாருங்கள். எடுத்தவர்கள் வீட்டு முகவரிக்கு அனுப்பலாம்.

**முறைப்பாட்டாளர் :** முறைப்பாட்டுப் பிரதி தர முடியுமா?

**பொலிஸ் அதிகாரி :** ஆம். நிச்சயமாக.

**முறைப்பாட்டாளர் :** மிகவும் நன்றி.

**எதிர்க்கருத்துள்ள சொற்கள்**

| | |
|---|---|
| உள்ளே - வெளியே | ඇතුලට - එළියට |
| வாருங்கள் - போங்கள் | එන්න - යන්න |
| உட்காருங்கள் - எழும்புங்கள் | වාඩිවෙන්න - නැගිටින්න |
| தொலைந்துவிட்டது - கிடைத்துவிட்டது | නැතිවුණා - ලැබුණා |
| காலை - மாலை | උදේ - සවස |
| இறங்கு - ஏறு | බහින්න - නගින්න |
| அனுப்புங்கள் - பெறுங்கள் | යවන්න - ලබාගන්න |

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

1. உரையாடலை விருப்பத்துடன் செவிமடுப்பார்.
2. புதிய சொற்களை அறிந்து பயன்படுத்துவார்.
3. அன்றாடத் தேவைகளை நிறைவேற்றப்பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துவார்.
4. அதிகமான சொற்களை விளங்கிப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி 1.0** : நாளாந்தத் தேவைகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : படகில் பயணம் செய்யும் போது வழங்கப்படும் அறிவுறுத்தல்கள்.

**பாடவேளை :** 02

## கற்றற் பேறுகள்:

- அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களைச் செவிமடுப்பார்
- அறிவுறுத்தல்களை மீண்டும் மீண்டும் கேட்பதில் ஆர்வம் காட்டுவார்.
- அவதானமாகச் செவிமடுத்துத் துலங்குவார்.
- ஒத்த இயல்புள்ள புதிய அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துத் துலங்க முனைவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறிவுறுத்தல்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- அறிவுறுத்தல்களை மீண்டும் மீண்டும் கேட்கச் செய்யுங்கள்.
- மாணவர் அவதானமாகச் செவிமடுத்துத் துலங்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அறிவுறுத்தல்களைச் செவிமடுத்துச் செயற்பட ஊக்குவியுங்கள்.
- வேறு அறிவுறுத்தல்களைச் செவிமடுக்கும் ஆர்வத்தை ஏற்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| படகு | - ඔරුව | அதிகம் | - වැඩි |
| விரைவு / வேகம் | - වේගය / ඉක්මන් | ஓடம் | - පාරුව |
| எண்ணிக்கை | - සංඛ්‍යාව | மெதுவாக | - සෙමින් |
| கவனமாக இருங்கள் | - පරිසමෙන් ඉන්න | பிரயாணிகள் | - මගින් |
| படகோட்டி | - නොටියා | ஆழம் | - ගැඹුරු |
| பாதுகாப்புக் கவசம் | - ආරක්ෂක ආවරනය | ஏறுங்கள் | - නගින්න |
| பாதுகாப்பு | - ආරක්ෂා | இறங்குங்கள் | - බහින්න |
| கூட | - වැඩි / සමග | | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- அறிவுறுத்தல்கள் எழுதிய சொல்லட்டைகள்
- பாடநூல்
- அறிவுறுத்தல்கள் அடங்கிய ஒலிநாடாக்கள்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

கவனமாக ஏறுங்கள்.
பாதுகாப்பு உடைகளை அணியுங்கள்.
இருபக்கமும் சமமாக உட்காருங்கள்.
தம்பி! நீங்கள் இந்தப் பக்கமாக வாருங்கள்.
மேலே போக வேண்டாம்.
இந்த அறைக்குள் செல்ல வேண்டாம்.

**ஆலயத்தினுள் காணப்படும் அறிவுறுத்தல்கள்**
**(மேலதிக கற்றலுக்காக)**

1. பாதணிகளுடன் உட்செல்லாதீர்கள்.
2. அமைதி பேணுவோம்.
3. சுத்தம் பேணுவோம்.
4. ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுவோம்.
5. கோயில் உள் வீதியில் (பிரகாரத்தினுள்) கற்பூரம் கொளுத்தாதீர்கள்.
6. கோயிலின் உள்ளே அநாவசியமாகக் கதைக்காதீர்கள்.
7. பிரசாதங்களைக் கீழே சிந்தாதீர்கள்.
8. நெருக்குதல் செய்யாதீர்கள்.
9. விபூதி, சந்தனம் போன்ற பிரசாதங்களைத் தூண்களில் பூசாதீர்கள்.
10. பூசைகள் முடிந்த பின்னர் நடைபெறும் அன்னதான நிகழ்வில் கலந்து கொள்ளுங்கள்.

## ஒத்தகருத்துள்ள சொற்கள்

| | |
|---|---|
| கவனம் - அவதானம் | අවධානය |
| உடை - ஆடை | ඇඳුම |
| தம்பி - இளைய சகோதரம் | මල්ලි |
| பாதணி - செருப்பு | සපත්තුව |
| அமைதி - நிசப்தம் | නිශබ්දය |
| சுத்தம் - தூய்மை | පිරිසුදු |
| கோயில் - ஆலயம் | කෝවිල |
| அனாவசியம் - தேவையற்றது | අනවශ්‍ය |
| உட்காருங்கள் - அமருங்கள், இருங்கள் | වාඩිවෙන්න |
| பேணுவோம் - பாதுகாப்போம் - கடைப்பிடிப்போம் | ආරක්ෂා කරමු |

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- அறிவுறுத்தல்களை ஆர்வத்துடன் செவிமடுப்பார்.
- அறிவுறுத்தல்களின் பொருளை விளங்கித் துலங்குவார்.
- அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடப்பார்.
- சந்தர்ப்பங்களுக்கேற்பப் பொருத்தமான அறிவுறுத்தல்களை வழங்குவார்.

**தேர்ச்சி 1.0** : நாளாந்தத் தேவைகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3** : வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

**விடய உள்ளடக்கம்** : விடுமுறைக் காலத்தைக் கழிக்கப் பொருத்தமான இடத்தை விசாரித்தல்.

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள்:**

- வழிநடத்தல்கள் தொடர்பான விடயங்களைச் செவிமடுப்பார்.
- திரட்டிய தகவல்களைச் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்க ஆர்வம் கொள்வார்.
- வழங்கப்படும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்பத் துலங்குவார்.
- இலகுவான சொற்களைப் பயன்படுத்தி, வேறு சந்தர்ப்பங்களில் பொருத்தமான வழிநடத்தல்களை மேற்கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- செவிமடுத்துச் செயற்படுவதற்கான வழிநடத்தல்களை வழங்குங்கள்.
- வழிநடத்தல்களை மீண்டும் மீண்டும் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- பாடப்பகுதியில் உள்ள வழிநடத்தல்களைச் செவிமடுத்துத் துலங்க உதவுங்கள்.
- மாணவர் ஒருவருக்கு ஒருவர் வழிநடத்தல்களை மேற்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இடர்படும் மாணவர்களுக்கு மேலதிக சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| விடுமுறை | - නිවාඩුව | வாகனம் | - වාහනය |
| மகிழ்ச்சி | - සතුට | சிற்றுண்டிச்சாலை | - ආපනශාලව |
| பொழுதுபோக்கு | - විනෝදාංශය | அதிவேகப் பாதை | - අධිවේගී මාර්ගය |
| உல்லாசப் பயணிகள் | - සංචාරකයෝ | அனுமதி | - අවසරය |
| வலது | - දකුණ | இடது | - වම |
| முன்னால் | - ඉදිරියෙන් | பின்னால் | - පිටුපස |
| சிறிய | - කුඩා / පුංචි | பெரிய | - ලොකු |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல்லட்டைகள்
- ஒலிப்பதிவு நாடா
- பாடநூல்

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்:

1. இப்போது யாத்திரை காலம் ஆரம்பித்துள்ளது.
2. இந்த விடுமுறையில் சிவனொளிபாத மலைக்குச் செல்வோம்.
3. கொழும்பில் இருந்து ஹட்டனுக்கு எப்படிச் செல்வது?
4. அவிசாவளைக்குச் செல்வதற்குப் புறக்கோட்டையிலிருந்து 122 / 99ஆம் இலக்க பேருந்தில் ஏறுங்கள்.
5. அவிசாவளை பேருந்து நிலையத்தில் இறங்கி, மீண்டும் ஹட்டன் செல்லும் பேருந்தில் ஏறுங்கள்.
6. அல்லது கொழும்பில் இருந்து நேராக ஹட்டன் செல்லும் பேருந்தில் பயணஞ் செய்யலாம்.
7. ஹட்டன் செல்லும் பேருந்தில் செல்வதாயிருப்பின், மஸ்கெலியா சென்று அதனூடாக சிவனொளிபாதமலை அடிவாரத்திற்கு செல்ல முடியும்.
8. மார்கழி முதல் ஏப்ரல் வரை யாத்திரை காலம் தொடரும்.

### ஒத்தகருத்துள்ள சொற்கள்

| | |
|---|---|
| மகிழ்ச்சி - சந்தேசம் - ஆனந்தம் | සතුට |
| வாகனம் - ஊர்தி | වාහනය |
| பாதை - வீதி | පාර |
| பயணிகள் - பிரயாணிகள் | මගීන් |
| அனுமதி - உத்தரவு | අනුමතිය / අවසර |

### எதிர்க்கருத்துள்ள சொற்கள்

| | |
|---|---|
| இடது - வலது | වම - දකුණ |
| முன்னால் - பின்னால் | ඉදිරිය - පිටුපස |
| சிறிய - பெரிய | කුඩා - ලොකු |
| மகிழ்ச்சி - துக்கம் | සතුට - දුක |

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- வழிநடத்தல்களுக்குப் பயன்படுத்தும் சொற்களைச் செவிமடுத்து சரியாகத் துலங்குவார்.
- வழிநடத்தல்களுக்கான சொற்களை அறிந்து பயன்படுத்துவார்.
- இலகுவான வழிநடத்தல்களை மேற்கொள்வார்.
- அன்றாட வாழ்வில் வழிநடத்தல்களில் ஈடுபடுவார்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 1.0** | : | நாளாந்தத் தேவைகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார். |
| **தேர்ச்சி மட்டம்** 1.4 | : | அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | விளம்பரம் |
| **பாடவேளை** | : | 02 |

## கற்றற் பேறுகள்:

- விளம்பரங்களை அவதானத்துடன் செவிமடுப்பார்.
- விளம்பரங்களைச் செவிமடுப்பதில் ஆர்வம் காட்டுவார்.
- விளம்பரம் ஒன்றில் இடம்பெறும் அறிவித்தல்களைச் செவிமடுப்பார்.
- வேறு விளம்பரங்களில் வரும் அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- சிறிய விளம்பரங்களை ஒலிநாடாவில் ஒலிக்கச் செய்யுங்கள்.
- பாடநூலில் உள்ள விளம்பரங்களை வாசித்துக் காட்டுங்கள்.
- விளம்பரத்தில் இடம்பெறும் அறிவித்தல்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள்.
- வெவ்வேறு விளம்பரங்களில் இடம்பெறும் அறிவித்தல்களைச் செவிமடுக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வேறு வகையான அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்க உதவுங்கள்.
- அறிவித்தல்களைச் செய்ய முன்வரும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| இதை | - මෙය | காலாவதித் திகதி | - කල් ඉකුත්වන දිනය |
| தரம் | - ශ්‍රේණිය | விலை | - මිල |
| வாங்குங்கள் | - මිළදී ගන්න | பொதி செய்த திகதி | - නිෂ්පාදිත දිනය |
| வியாபாரச் சின்னம் | - ව්‍යාපාරික ලාංඡනය | இலவச இணைப்பு | - නොමිලේ ඇමිණුම |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- விளம்பரங்கள் அடங்கிய ஒலி நாடா
- பாடநூல்
- சொல்லட்டைகள்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

# யோகட்

|  |
|---|
| சிறுவர்கள் அதிகம் விரும்பும் போசாக்கான சிற்றுண்டி.<br>உற்பத்தியாளர்கள் : மில்கோஸ்.<br><br>உற்பத்தித் திகதி: 2014.10.14.<br>காலாவதியாகும் திகதி : 2014.11.14<br>விலை : ரூபா 40.00.<br>அளவு : 50 மி.லீ. |

காலாவதியாகும் தினத்தைப் பார்த்து வாங்குக.
பொதியின் நிறத்தைப் பார்த்து வாங்குக.
அடையாளச் சின்னத்தைப் பார்த்து வாங்குக.
இலவச இணைப்பைக் கேட்டுப் பெறுக.
பாவனை முறைகளைச் சரியாகப் பின்பற்றுக.

## எதிர்ப்பாற் சொற்கள்

| | |
|---|---|
| சிறுவன் - சிறுமி | පිරිමි ළමයා - ගැහැණු ළමයා |
| மாணவன் - மாணவி | ශිෂ්‍යයා - ශිෂ්‍යයාව |
| தாய் - தந்தை | මව - පියා |
| ஆசிரியர் - ஆசிரியர் | ගුරුතුමා - ගුරුතුමිය |

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- விளம்பரங்களைச் செவிமடுத்துப் புதிய சொற்களை அறிந்து கொள்வார்.
- விளம்பரங்களில் இடம்பெறும் அறிவித்தல்களைச் செவிமடுத்துத் துலங்குவார்.
- வேறு விளம்பரங்களில் வரும் அறிவித்தல்களைச் செவிமடுக்க ஆர்வம் காட்டுவார்.

**தேர்ச்சி 1.0** : நாளாந்தத் தேவைகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட இலகுவான கூற்றுக்களைச் செவிமடுத்து, அவற்றை இனங்கண்டு துலங்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.5** : வானொலி, ஒலிநாடா ஒலிபரப்புகளைச் செவிமடுத்து இரசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : நகைச்சுவைக் கதைகள்.

**பாடவேளை :** 02

**கற்றற் பேறுகள்:**

- நகைச்சுவைத் தகவல்களை ஆர்வத்துடன் செவிமடுப்பார்.
- நகைச்சுவைக் கதைகளை விரும்பிச் செவிமடுத்து இரசிப்பார்.
- நகைச்சுவைக் கதைகளின் பொருளை விளங்கி இரசிப்பார்.
- வேறு கதைகளையும் தகவல்களையும் செவிமடுத்துத் துலங்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- நகைச்சுவைத் தகவல்களை விளங்கும் வகையில் எளிமையாகக் கூறுங்கள்.
- பொருளை அறிந்து கொள்ள உதவுங்கள்.
- சிறிய நகைச்சுவைக் கதைகளைக் கூறுங்கள்.
- மாணவர் நகைச்சுவைக் கதைகளைச் செவிமடுக்க உற்சாகப்படுத்துங்கள்.
- வேறு ஒலிபரப்புக்களைக் கேட்டு இரசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | | | |
|---|---|---|---|
| வெளிநாடு | - පිට රට | ஏமாற்று | - රවටන්න |
| தூதுக்குழு | - දූත පිරිස | பணிப்பெண் | - සේවිකාව |
| மன்னர் | - රජතුමා | திகைத்து | - පුදුමට පත්වීය |
| பரிசு | - තෑග්ග | சர்க்கரை | - සීනි |
| கெடாமல் | - නරක්නොවී | அழுதவாறு | - අඬමින් |
| உலர வைத்தல் | - වේලීම | தலையாட்டுதல் | - හිස සෙලවීම |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- கதைகள் எழுதிய சொல்லட்டைகள்
- கதைகள் அடங்கிய ஒலிப்பதிவு நாடா
- பாடநூல்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

தென்னாலிராமன் கதை.

**சர்க்கரை மணலானது**

வெளிநாட்டிலிருந்து தூதுக்குழு ஒன்று மன்னரைப் பார்ப்பதற்காக வந்திருந்தது. அவர்கள் மன்னருக்கு பரிசாக உயர்தரமான சர்க்கரையைப் (சீனி) பரிசளித்தனர். மன்னர் சாப்பிட்டுப் பார்த்தார். அதன் சுவை மன்னருக்குப் பிடித்துவிட்டது. நீண்ட நாட்களுக்குப் பழுதாகாமல் இருக்க சர்க்கரையை உலர வைக்குமாறு பணிப்பெண்களிடம் ஒப்படைத்தார். யார் கேட்டாலும், இது ''வெளிநாட்டு மண்'' என்று கூறுமாறு பணித்தார். அவர்களும் அவ்வாறே கூறி வந்தனர்.

தெனாலிராமன் சர்க்கரையைக் கண்டதும் ''இது என்ன பொருள்?''என்று மன்னரிடம் கேட்டார். மன்னரும் ''இது வெளிநாட்டு மண்'' எனப் பதிலளித்தார். வீட்டுக்குச் சென்ற தெனாலிராமன் தனது மகனிடம் இரகசியமாக ஏதோ கூறினார். அவனும் மகிழ்வுடன் தலையை ஆட்டிக்கொண்டு ''எனது திறமையைப் பாருங்கள்'' என்றான்.

அடுத்தநாள், தெனாலிராமன் அரசருடன் அரண்மனைக்குள் கதைத்துக் கொண்டிருந்தான். அவ் வேளையில் தெனாலிராமனின் மகன் அழுதவாறு ஓடி வந்தான். ''அப்பா! எங்கள் வீட்டுப் பசுக்கன்று செத்துப் போய்ச்சுது'' என்று கதறி அழுதான். தெனாலிராமனும் ''என்னடா இப்படி, எல்லோர் வாயிலும் மண்ணை அள்ளிப்போட்டு விட்டுப் போய்விட்டதே! இனிமேல் நாம் என்ன செய்யப் போகிறோம்'' என்று கதறிய வண்ணம் காயப் போட்டிருந்த வெளிநாட்டு மண்ணை அள்ளி மகனும் தந்தையும் ஒருவர் வாயில் ஒருவர் போட்டுக் கொண்டனர்.

இவற்றைப் பார்த்த மன்னன் திகைத்துப் போய் நின்றான். தெனாலிராமன் தன்னிடமிருந்த மேல் துண்டை விரித்து மேலும் மேலும் வெளிநாட்டு மண்ணை அள்ளிப் போட்டு அதனை மூட்டையாகக் கட்டினான். ''வீட்டிலுள்ள எல்லோரது வாயிலும் இந்த மண்ணைப் போடு'' என மகனிடம் கொடுத்தார். மகனும் மூட்டையை எடுத்துக் கொண்டு வீட்டிற்கு ஓடினான். இதனைப் பார்த்த மன்னர் ''டேய்! தெனாலிராமா நீ செய்கின்ற வேலை உனக்கே நல்லாயிருக்கிறதா? சொல்லு'' என்றார்.

''ஏன்? மன்னா! இது மண்தானே!'' என தெனாலிராமன் அப்பாவித்தனமாக கேட்டான். ''இல்லையடா! இது சர்க்கரை. உன்னை ஏமாற்றத்தான் வெளிநாட்டு மண்'' என்று சொன்னேன் என அரசர் அசடு வழிந்தார்.

**எதிர்க்கருத்துள்ள சொற்கள்**

| | |
|---|---|
| உலர்த்துதல் - நனைத்தல் | වියළීම - තෙමීම |
| சிரித்தல் - அழுதல் | සිනාසීම - ඇඬීම |
| மேல் - கீழ் | උඩ - යට |
| உள்நாடு - வெளிநாடு | දේශීය - විදේශීය |
| வருதல் - போதல் | ඒම - යාම |

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- நகைச்சுவைத் தகவல்களை செவிமடுத்து இரசித்து வெளிப்படுத்துவார்.
- நகைச்சுவைத் கதைகளை செவிமடுத்து இரசிப்பார்.
- நகைச்சுவைத் தகவல், கதைகளின் பொருளை அறிந்து கூறுவார்.
- வேறு நகைச்சுவைக் கதைகளைச் செவிமடுத்து இரசிப்பார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பாக வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : அறிவுறுத்தல்களை விளங்கிச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்:** வைத்திய ஆலோசனைக்குப் பதிவு செய்தல்.

**பாடவேளை :** 03

## கற்றற் பேறுகள்:

- பொது இடங்களில் காணக்கூடிய அறிவுறுத்தல்களைக் கூறிக் கலந்துரையாடுவார்.
- வைத்தியசாலையில் காணக்கூடிய அறிவுறுத்தல்களை முன்வைப்பார்.
- வழங்கப்படும் அறிவுறுத்தல்களை முறையாகச் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்குவார்.
- ஆலோசனைப் பதிவிற்கான அறிவுறுத்தல்களை வழங்கிப் பதிவு செய்துகொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பொதுவாகக் காணக்கூடிய அறிவுறுத்தல்களை முன்வைத்துக் (காட்சிப்படுத்தி) கலந்துரையாடுங்கள்.
- வைத்தியசாலையில் காணக்கூடிய அறிவுறுத்தல்களை வேறுபடுத்தவும் துலங்கவும் வழிப் படுத்துங்கள்.
- எழுமாற்றாக அறிவுறுத்தல்களை வழங்கி, அதற்கேற்பத் துலங்க வழிப்படுத்துங்கள்.
- அறிவுறுத்தல்களை வழங்கிப் பதிவு செய்துகொள்ள வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| நோயாளி | - රෝගියා | தொடர்பான | - සම්බන්ද |
| மருந்து | - බෙහෙත් | வைத்தியர் | - වෛද්‍යවරයා |
| நிபுணர் | - ප්‍රවීණයා | பதிவு | - ලියාපදිංචි |
| நேரம் | - වේලාව | வருகை | - පැමිණීම |
| கட்டணம் | - ගාස්තුව | குறித்த நேரம் | - නියමිත වේලාව |
| வரவேற்பாளர் | - පිළිගැනීමේ නිලධාරි | உறுதிப்படுத்தல் | - තහවුරුකිරීම |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல் அட்டைகள்
- மாதிரி பதிவுப் படிவம்
- பாடநூல்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்**

## வைத்திய ஆலோசனைப் பதிவிற்கான அறிவுறுத்தல்கள்.

1. வைத்திய நிபுணர்களின் சேவைக்கான பதிவினை முன்கூட்டியே பதிவு செய்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
2. வைத்திய ஆலோசனைக்காகப் பதிவு செய்த பின்னர் நோயாளிகள் வருகை தராது விடின் 80 சதவீதமான கட்டணத்தினை மாத்திரமே மீளப் பெற்றுக் கொள்ள முடியும்.
3. வைத்திய நிபுணர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு வருகை தருவதால் முன்கூட்டியே நோயாளர்கள் வருகை தந்திருத்தல் வேண்டும்.
4. வைத்திய ஆலோசனை பெறுவதற்கு முன்னர் வரவேற்பாளரிடம் வருகையையும் ஆலோசனை பெறும் இடத்தினையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
4. பதிவு செய்த ஒழுங்கில் வைத்திய ஆலோசனை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.
5. மருத்துவப் பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆய்வுகூட வசதிகள் இங்கு உள்ளன.
6. தொடர் மருத்துவ பரீட்சைகளுக்கு ஆலோசனை பெற்றவர்கள், இங்கு அதற்கான வசதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

### ஒத்தகருத்துள்ள சொற்கள்

| | |
|---|---|
| மருந்து - ஔடதம் | වියළීම - ඖෂධ |
| இடம் - நிலையம் | තැන - ස්ථානය |
| பரீட்சை - சோதனை | විභාගය - පරීක්ෂණය |

### எதிர்க்கருத்துள்ள சொற்கள்

| | |
|---|---|
| சுகதேகி - நோயாளி | නිරෝගියා - රෝගියා |
| விருப்பு - வெறுப்பு | කැමති - අකැමති |
| கொடுத்தல் - வாங்குதல் | දීම - ගැනීම |

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பொது இடங்களில் காணக்கூடிய அறிவுறுத்தல்களை முன்வைப்பார்.
- வைத்தியசாலையில் காணக்கூடிய அறிவுறுத்தல்களை முன்வைப்பார்.
- வழங்கப்படும் அறிவுறுத்தல்களைச் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்குவார்.
- தாமாக முன்வந்து அறிவுறுத்தல்களை வழங்குவார்.
- அறிவுறுத்தல்களைப் பெற்று வைத்திய ஆலோசனைக்கான பதிவினைச் செய்து காட்டுவார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பாக வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : வழிநடத்தல்களைப் பின்பற்றி உரையாட முன்வருவார்.

**விடய உள்ளடக்கம்** : சுற்றுலாப் பயணத்திற்கு அனுமதிப்பத்திரம் பெறும் வழிகள்.

**பாடவேளை** : 03.

## கற்றற் பேறுகள்:

- பயண அனுமதி பெறுவதற்கு தேவையான தரவுகளைப் பட்டியற்படுத்திக் கூறுவார்.
- மாணவர்கள் சோடியாக இணைந்து மாதிரி அனுமதி பெறும் நிகழ்வை நடத்தி உரையாடிக் காட்டுவார்.
- வழங்கப்படும் அறிவுறுத்தல்களை முறையாகச் செவிமடுத்துக் கிரகித்து அதற்கேற்பத் துலங்கி அனுமதியைப் பெறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

1 • சுற்றுலா செல்லுமுன், செல்ல வேண்டிய இடங்களைப் பற்றி கலந்துரையாடுங்கள்.
2 • பார்வையிடும் இடங்களில் அனுமதி பெறுவதற்குத் தேவையான தரவுகளைப் பட்டியற்படுத்த வழிப்படுத்துங்கள்.
3 • மாணவர்கள் சோடியாகப் பிரிந்து மாதிரியொன்றைச் செய்து காட்ட வழிப்படுத்துங்கள்.
4 • வழங்கப்படும் அறிவுறுத்தல்களைச் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்க வழிப்படுத்துங்கள்.
5 • பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| முகவரி | - ලිපිනය | எத்தனை பேர்? | - කීදෙනෙකු ද? |
| வரும் திகதி | - එන දිනය | மாணவர்களா? | - ශිෂ්‍යයින් ද? |
| ஊழியர்களா? | - සේවකයින් ද? | அரை அனுமதிச்சீட்டு | - බාග ප්‍රවේශපත්‍රය |
| அனுமதிச்சீட்டு | - ප්‍රවේශපත්‍රය | | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல் அட்டைகள்
- பாடநூல்

### பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

வணக்கம் ஐயா!
நாங்கள் சுற்றுலா செல்வதற்காக பயண அனுமதி பெற வந்துள்ளோம்.
உங்கள் நிலையத்தின் பெயர் என்ன?
எத்தனையாம் திகதி?
எத்தனை பேர் வருவீர்கள்?
சிறுவர்கள் எத்தனை பேர்?
பெரியவர்கள் எத்தனை பேர்?
ஆசிரியர்கள் எத்தனை பேர்?
எவ்வளவு தொகை?

### ஒருமை - பன்மை

| | |
|---|---|
| சிறுவன் - சிறுவர்கள் | ළමයා - ළමයි |
| ஊழியர் - ஊழியர்கள் | කම්කරුවා - කම්කරුවෝ |
| மாணவன் - மாணவர்கள் | ශිෂ්‍යයා -ශිෂ්‍යයෝ |
| அதிபர் - அதிபர்கள் | විදුහල්පති - විදුහල්පතිවරු |
| ஆசிரியர் - ஆசிரியர்கள் | ගුරුවරයා - ගුරුවරු |

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- சுற்றுலா செல்லும் முன் செய்யவேண்டிய ஆயத்தங்கள் பற்றிக் கலந்துரையாடுவார்.
- பயண அனுமதி பெறுவது தொடர்பான தரவுகளைப் பட்டியற்படுத்திக் கூறுவார்.
- மாதிரி அனுமதிபெறும் செயற்பாட்டைச் செய்து காட்டுவார்.
- வழங்கப்படும் அறிவுறுத்தல்களைச் செவிமடுத்து அனுமதி பெறுவார்.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி** 2.0 | : | பொதுவான விடயங்கள் தொடர்பாக வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார். |
| **தேர்ச்சி மட்டம்** 2.3 | : | நட்பு ரீதியாக உரையாடுவதற்கு முன்வருவார். |
| **விடய உள்ளடக்கம்** | : | விடுமுறையின்போது சென்ற சுற்றுலாப் பயணம் தொடர்பான கலந்துரையாடல். |
| **பாடவேளை** | : | 03. |

### கற்றற் பேறுகள்:

- பொருத்தமான சொற்களை அறிந்து, விடுமுறையில் சென்ற சுற்றுலா பற்றிக் கூறுவார்.
- தான் சென்ற சுற்றுலா தொடர்பாக தனது நண்பர்களுடன் கலந்துரையாட முனைவார்.
- தான் சென்ற சுற்றுலா தொடர்பாக தங்களின் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- தாங்கள் சென்ற சுற்றுலாவைப் பற்றிய கருத்துக்களைப் பண்பாகக் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர்க்கிடையே "நான் சென்ற சுற்றுலா" தொடர்பாகத் தங்களின் கருத்தை முன்வைத்து கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.
- தான் சென்ற சுற்றுலா தொடர்பாகத்ங்களின் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| சுற்றுலா | - චාරිකාව | சந்தோசம் | - සතුට |
| முக்கியத்துவம் | - වැදගත් | எல்லோரும் | - සියල්ලෝම / හැමෝම |
| கடற்கரை | - මුහුදු වෙරළ | படகு | - ඔරුව |
| விஷேசம் | - විශේෂ | பயணச்சீட்டு | - ගමන් පත්‍ර |
| அழகு | - ලස්සන | கட்டாயம் | - අනිවාර්ය |

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல் அட்டைகள்
- பாடநூல்
- சுற்றுலா தொடர்பான படங்கள்

### பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.

நீங்கள் விடுமுறைக்கு எங்கே சென்றீர்கள்?
யாருடன் போனீர்கள்?
எங்கெல்லாம் போனீர்கள்?
நுவரெலியாவுக்குச் சென்றோம்.
எங்கள் குடும்பமும் பக்கத்து வீட்டு மாமா குடும்பமும் சென்றோம்.
ஹக்கல பூந்தோட்டம், உலகமுடிவு, றம்பொட நீர்வீழ்ச்சி என பல இடங்களுக்குச் சென்றோம்.

**சுற்றுலாப் பயணம்.**

நயினாதீவுக்குச் செல்லுதல்.

சஜித் : எனக்கு நயினாதீவுக்குப் போவதற்கு விருப்பமாயிருக்கு. எப்படிப் போவது?

அன்வர் : இப்ப புகையிரதத்தில் யாழ்ப்பாணம் வரை போகலாம் அல்லவா!.

சஜித் : ஓம் சஜித். நீங்கள் குருணாகல் புகையிரத நிலையத்தில் யாழ்ப்பாணத்திற்கான பயணச் சீட்டினைப் பெற்றுக்கொண்டு போகலாம் தானே?

அன்வர் : யாழ்ப்பாணத்தில் எங்கே தங்குவது?

கௌதம் : எங்கள் வீட்டிற்கு வாருங்கள். அங்கிருந்து எல்லோரும் சேர்ந்து போவோம்.

அன்வர் : நன்றி கௌதம். சஜித் உனக்கு விருப்பம் தானே.

சஜித் : சரியான விருப்பம். கௌதம், நயினாதீவுக்கு நேரே பஸ்ஸில் போகலாம் தானே?

கௌதம் : இல்லை. குறிகட்டுவான் என்ற இடம் வரை பஸ்ஸில் போய், அங்கிருந்து நயினாதீவுக்கு படகில் செல்ல வேண்டும்.

அன்வர் : அப்படியானால் எல்லா ஒழுங்குகளையும் கௌதம் நீ செய்வாயா?

கௌதம் : இப்பவே அப்பாவிடம் சொல்கிறேன். அப்பா எல்லாவற்றையும் செய்து தருவார்.

சஜித் : நயினாதீவில் என்ன முக்கியத்துவம் உள்ளது?

கௌதம் : நயினாதீவில் பிரசித்தமான கோயில்கள் உள்ளன. நாகபூசணி அம்மன் கோயில், நாகவிகாரை உள்ளன. மேலும் அழகிய கடற்பரப்பையும் தொலைவில் நெடுந்தீவு, அனலைதீவு, எழுவை தீவுகளையும் பார்க்கலாம்.

அன்வர் : நன்றி, கட்டாயம் எல்லோரும் போவோம்.

**பின்வரும் வாக்கியங்களை சிங்களத்தில் மொழிபெயர்க்குக.**

இது எனது ஊர்.

------------------------------------------

நாம் புகையிரதத்தில் செல்வோம்.

------------------------------------------

நாம் படகில் செல்வோம்.

------------------------------------------

நெடுந்தீவுக்குப் போவோமா?

------------------------------------------

**ஒத்தகருத்துள்ள சொற்கள்.**

| | |
|---|---|
| புகையிரதம் - புகைவண்டி | දුම්රිය |
| பயணம் - பிரயாணம் | ගමන |
| வீடு - இல்லம் - மனை | නිවස |
| எல்லோரும் - அனைவரும் | හැමෝම |
| பேருந்து - பஸ் | බසය |
| கடல் - சமுத்திரம் | මුහුද |
| தொலைவு - தூரம் | ඈත |

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- விடுமுறையில் தாங்கள் சென்ற சுற்றுலாவைப் பற்றிய கருத்துக்களை முன்வைப்பார்.
- தான் சென்ற சுற்றுலாவைப் பற்றித் தனது நண்பனுடன் கலந்துரையாடுவார்.
- தாங்கள் சென்ற சுற்றுலாவைப் பற்றி நட்பு ரீதியாகக் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பாக வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.4** : தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக உரையாடுவார்.

**விடய உள்ளடக்கம்** : தொலைந்த புத்தகம் பற்றிய தகவல்களை வினாவுதல்.

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள்:

- தொலைந்த பொருட்களைப் பற்றிய விடயங்களைக் கலந்துரையாடுவார்.
- தொலைந்த பொருள் தொடர்பான விடயங்களை இனங்காணும் வகையில் வினாக்களை எழுப்புவார்.
- தொலைந்த பொருள் தொடர்பாக எழுப்பப்படும் வினாக்களைச் செவிமடுத்துப் பண்பாக விடையளிப்பார்.
- தொலைந்த பொருளைத் தேடுவதற்குப் பொருத்தமான வினாக்களையும் விடைகளையும் கூறிக் கலந்துரையாடிச் செயற்படுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- ஏற்கனவே தொலைந்த பொருட்களைப் பற்றி கலந்துரையாட மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- தொலைந்த புத்தகம் தொடர்பான வினாக்களை எழுப்புவதற்குத் துணைபுரியுங்கள்.
- தொலைந்த பொருள் (புத்தகம்) தொடர்பாக எழுப்பப்படும் வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துங்கள்.
- தொலைந்த பொருளைத் தேடுவதற்குப் பொருத்தமான வினாக்களையும் விடைகளையும் பரிமாற வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | |
|---|---|
| எப்போது? - කවදාද ? | பார்த்தீர்களா? - බැලුවා ද ? |
| என்ன? - මොකද්ද ? | கண்டீர்களா? - දුටුවා ද ? |
| எங்கே? - කොහේද ? | எடுத்தீர்களா? - ගත්තාද ? |
| தொலைந்தது - නැතිවිය | நீல நிறம் - නිල් පාට |
| உறை - කවරය | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல் அட்டைகள்
- பாடநூல்
- உண்மைப் பொருள்கள்

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்

குமார்: என்னுடைய தமிழ் புத்தகத்தை பார்த்தீர்களா?
கல்கி: இல்லை, என்ன புத்தகம், புத்தகத்தின் மேலட்டை என்ன நிறம்?
குமார்: ஒரு நீல நிற உறை. என்னுடைய பெயரை எழுதியிருக்கிறேன்.
கல்கி: எப்போது காணாமல் போனது?
குமார்: நேற்று பின்னேரம் கண்டனான்.
கல்கி: உன்னுடைய மேசையில் தேடிப்பார்ப்போம்.
குமார்: நான் எல்லா இடமும் தேடிப்பார்த்தனான். எனக்கு இப்ப வேணும்.
கல்கி: யாருக்காவது கொடுத்தியா? யோசிச்சுப் பார்.
குமார்: ம்...ம்... நேற்றுவீட்டு வேல செய்தனான். வீட்டிலதான் விட்டுட்டு வந்துவிட்டேன்.
கல்கி: நல்ல ஆள்தான் நீ.......

### ஒத்தகருத்துள்ள சொற்கள்

| | | |
|---|---|---|
| புத்தகம் | - நூல் | පොත |
| பெயர் | - நாமம் | නම |
| பின்னேரம் | - மாலை | හවස |
| தொலைந்தது | - காணாமல் போனது | නැතිවිය |
| பொருள் | - பண்டம் | භාණ්ඩය |
| வினா | - கேள்வி | ප්‍රශ්නය |
| விடை | - மறுமொழி | උත්තර |
| உண்மை | - மெய் | ඇත්ත |

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- தான் தொலைத்த பொருள் தொடர்பான விடயங்களை முன்வைத்து உரையாடுவார்.
- தொலைந்த பொருள் தொடர்பான வினாக்களை எழுப்பி உரையாடுவார்.
- தொலைந்த பொருள் தொடர்பான வினாக்களுக்கு விடை கூறி மகிழ்ச்சியாகச் செயற்படுவார்.
- தொலைந்த பொருளைத் தேடிப் பெறுவதற்குப் பொருத்தமான வினாக்களையும் விடைகளையும் முன்வைத்துக் கலந்துரையாடுவார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பாக வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம் 2.5** : கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்காகச் செயற்படுவார்.

**விடய உள்ளடக்கம்** : சிரமதானம் நடைபெறும் சந்தர்ப்பத்தில் உரையாடுதல்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள்:**

- இடத்திற்குப் பொருத்தமான வகையில் பண்பான பதங்களைக் கையாண்டு உரையாடுவார்.
- தங்களுக்குத் தேவையான பொருளைப் பெறுவதற்காகப் பல்வேறு வினாக்களை எழுப்பி உரையாட முன்வருவார்.
- சக நண்பர்களுடன் இணைந்து செயற்படுவதற்காக உரையாடுவார்.
- சிரமதானத்தின்போது சக நண்பர்களுடன் அந்நியோன்யமாக உரையாடுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- இடத்திற்குப் பொருத்தமான வகையில் உரையாட வழிப்படுத்துங்கள்.
- தங்களுக்குத் தேவையான பொருளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் உரையாட வழிப்படுத்துங்கள்.
- சிரமதானத்தின்போது காணப்படும் பல்வேறு நடவடிக்கைகளினூடாகப் பண்பாக உரையாட வழிப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | |
|---|---|
| சிரமதானம் - ශ්‍රමදානය | சில்லுவண்டி - කරත්තය |
| மண்வெட்டி - උදැල්ල | தேநீர் - තේ |
| அலவாங்கு - අලවංගුව | பாண் - පාන් |
| கத்தி - පිහිය | சீனி - සීනි |
| இழுங்கள் - අදින්න | தள்ளுங்கள் - තල්ලුකරන්න |

**தரவிருத்தி உள்ளீடுகள்:**

- சொல் அட்டைகள்
- பாடநூல்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

மண்வெட்டியைத் தாருங்கள்
எல்லோரும் வாருங்கள்
பாண் சாப்பிடுங்கள்
சேர்ந்து இழுப்போம்
விரைவாக வேலையைச் செய்வோம்.

| **தன்மை** උත්තම පුරුෂ | **முன்னிலை** මධ්‍යම පුරුෂ | **படர்க்கை** ප්‍රථම පුරුෂ |
|---|---|---|
| நான் சாப்பிடுகிறேன். | நீங்கள் சாப்பிடுகிறீர்கள். | அவர்கள் சாப்பிடுகிறார்கள். |
| நான் போகிறேன். | நீங்கள் போகிறீர்கள். | அவர்கள் போகிறார்கள். |
| நான் தருகிறேன். | நீங்கள் தருகிறீர்கள். | அவர்கள் தருகிறார்கள். |
| நான் செய்கிறேன். | நீங்கள் செய்கிறீர்கள். | அவர்கள் செய்கிறார்கள். |
| நான் குடிக்கிறேன். | நீங்கள் குடிக்கிறீர்கள். | அவர்கள் குடிக்கிறார்கள். |

**கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:**

- இடத்திற்குப் பொருத்தமான முறையில் பண்பாக வினாவெழுப்பி உரையாடுவார்.
- தேவையான பொருளைப் பெறும்பொருட்டு வினாவெழுப்பிச் செவிமடுத்து உரையாடுவார்.
- செயற்பாடுகளின்போது அடுத்தவர்களின் உதவிகளைப் பெறும் வகையில் உரையாற்றுவார்.
- சிரமதானத்தின்போது நிகழ்ந்தவற்றைத் தொகுத்து முன்வைப்பார்.

**தேர்ச்சி 2.0** : பொதுவான விடயங்கள் தொடர்பாக வெவ்வேறு தலைப்புகளில் உரையாடுவதற்கு முன்வந்து செயற்படுவார்

**தேர்ச்சி மட்டம் 2.6** : சிறியவாக்கியங்களைப் பயன்ப:டுத்தி உரையாடுவதற்கு முன்வருவார்

**விடய உள்ளடக்கம்:** மாணவர் மன்றம் அமைத்தல்.

**பாடவேளை :** 03

### கற்றற் பேறுகள்:

- பொதுவான இடங்களில் பண்பாகக் கலந்துரையாடுவார்.
- பொது இடங்களில் தங்களது கருத்துக்களைப் பரிமாறும் வகையில் உரையாட முன்வருவார்.
- சிறிய வாக்கியங்களுக்கு மெருகூட்டிச் சபையில் உரையாடுவார்.
- நிர்வாகம் தொடர்பான கருத்துக்களை உரிய முறையில் முன்வைத்து உரையாடுவார்.
- நிகழ்ச்சிகள் தொடர்பான கருத்துக்களை முன்வைத்து தெளிவாக உரையாடுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- பொது இடங்களில் பண்பாக உரையாட உதவுங்கள்.
- பொது இடங்களில் தங்களது சுய கருத்தை பண்பாக முன்வைக்க உதவுங்கள்.
- நிர்வாக தெரிவு தொடர்பான பதங்களை முன்வைத்து உதவுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| நிர்வாகம் | - කාර්ය මණ්ඩලය / පරිපාලනය | பொருளாளர் | - භාණ්ඩාගාරික |
| தலைவர் | - නායකයා | வழிமொழிதல் | - සථිර කිරීම |
| செயலாளர் | - ලේකම් | தெரிவு | - තේරීම |
| இலக்கியம் | - සාහිත්‍ය | முன்மொழிதல் | - යෝජනා කිරීම |
| பேச்சு | - කථා | ஆரம்பம் | - ආරම්භය |
| பிரேரணை | - යෝජනා | உறுப்பினர் | - සාමාජික |

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல் அட்டைகள்
- பாடநூல்

### பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்

ஆசிரியர் : சபையில் உள்ளவர்கள், செயலாளர் ஒருவரை முன்மொழியுங்கள்.
மாணவன் 1 : நான் தரம் 11 ச் சேர்ந்த P. மூர்த்தியை செயலாளராக முன்மொழிகிறேன்.
ஆசிரியர் : அதை யாராவது வழிமொழியுங்கள்.
மாணவன் 2 : அதை நான் வழிமொழிகிறேன்.
ஆசிரியர் : அதை ஏகமனதாக எல்லோரும் ஏற்றுக் கொள்கிறீர்களா? வேறு பிரேரணைகள் இருந்தால் முன்வைக்கலாம். இல்லாவிடில் தலைவர், பொருளாளர் என நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்யலாம்.

## வாக்கிய அமைப்பு.

நான் செயலாளரைத் தெரிவு செய்கிறேன்

මම ලේකම්වරයාව යෝජනා කරමි

நான் பொருளாளரைத் தெரிவு செய்கிறேன்.

මම භාණ්ඩාගාරික වරයාව යෝජනා කරමි

ஏனைய நிர்வாக உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளோம்.

අනිත් පරිපාලන සාමාජිකයන් යෝජනා කෙළෙමු

நாம் மாணவர் மன்றத்தினை அமைத்துள்ளோம்.

අපි ශිෂ්‍ය සංගමය පිහිටුවෙමු

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- பொது அவைகளில் பண்பாக உரையாடுவார்.
- பொது இடங்களில் தங்களது கருத்துக்களை முன்வைப்பார்.
- நிர்வாக ரீதியான பதவிகளை அறிந்து, அவை தொடர்பான விடயங்களை முன்வைப்பார்.
- நிர்வாக அறிக்கைக்கான விடயங்களைத் தொகுத்து முன்வைப்பார்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்தத் தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி 3.1** : கடிதங்களையும் வேறு படிவங்களையும் விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : தொழில் முறைக்கடிதம்

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள்:

- தரப்பட்ட கடிதங்களை விளங்கி வாசிப்பார்.
- பாடப்பகுதியில் வரும் கடிதத்தை ஆர்வத்துடனும் விருப்பத்துடனும் வாசிப்பார்.
- புதிய சொற்கள், சொற்தொடர்களை இனங்கண்டு வாசித்துக் காட்டுவார்.
- பாடநூலிலிருந்து கடிதங்களை அடையாளங்காட்டி, கடிதங்களை வாசிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- தொழில்முறைக் கடிதங்களைக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- எழுமாறாக மாணவரை அழைத்து மாதிரிக் கடிதத்தை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- குழுக்களாகப் பிரித்துப் பாடநூலில் உள்ள கடிதத்தை ஒருவர் வாசிக்க, ஏனையோரை அவதானிக்கச் செய்யுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | |
|---|---|---|
| முகவுரை - හැදින්වීම | வறுமை - දුප්පත්කම | நன்றி - ස්තූතියි |
| கடிதம் - ලියුම් | கல்வி - අධ්‍යාපනය | சுகம் - සනීපය |
| அன்புள்ள - ආදරය | மதிப்பு - ගරුත්වය | நண்பன் - මිතුරා |
| செய்தி - ප්‍රවෘති | நண்பி - මිතුරිය | முகவரி - ලිපිනය |
| முழுப்பெயர் - සම්පූර්ණ නම | | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- செய்தித் துணுக்குகள்
- மாதிரிக் கடிதங்கள்
- பாடநூல்
- படிவங்கள்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

தி. சபேஸ்,
தரம் 11,
கொ/றோயல் கல்லூரி,
கொழும்பு.
2015.01.20.

வகுப்பாசிரியர்,
தரம் 11,
கொ/றோயல் கல்லூரி,
கொழும்பு.

ஐயா,

பாடசாலைக்கு சமுகமளிக்க முடியாமை

நாளைய தினம் எனது உறவினர் ஒருவருக்குத் திருமணம் நடக்கவிருப்பதால் அன்றைய தினம் நானும் அத்திருமணத்திற்குச் செல்ல வேண்டியுள்ளது.

எனவே, அன்றைய தினத்தில் எனக்கு ஒரு நாள் விடுமுறை தந்து உதவுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி.

இப்படிக்கு,
உண்மையுள்ள,
மாணவன்,
தி.சபேஸ்.

## வாக்கிய அமைப்பு.

மரத்தால் செய்யப்பட்ட மேசை
ගසෙන් සාදන ලද මේසය
மரத்தால் விழுந்த பழம்
ගසෙන් වැටුණු පළතුර
மகாத்மா காந்தியால் எழுதப்பட்ட சத்திய சோதனை.
මහාත්මා ගාන්දි තුමා විසින් ලියන ලද සත්‍ය සෝදනෙ
இலங்கையால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை
ලංකාවෙන් ඉදිරිපත් කළ ඉල්ලීම
அதிபரால் கூறப்பட்ட புத்திமதி
විදුහල්පති තුමා විසින් පවසන ලද අවවාද

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- தரப்பட்ட பகுதியை உரத்து வாசிப்பார்.
- கடித உள்ளடக்கங்களை வாசித்து விளங்கிக் கூறுவார்.
- வேறு செய்திகளை வாசித்துக் காட்ட முன்வருவார்.
- சரளமாக வாசித்துக் காட்டுவார்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான அறிமுகமற்ற சொற்கள் சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : இலக்கியங்களை விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்:** இராமாயணம் உரைப்பகுதி.

**பாடவேளை** : 03.

## கற்றற் பேறுகள்:

- உரைப்பகுதியை உரத்து வாசிப்பார்.
- வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து உரைப்பகுதியை வாசிப்பார்.
- உரைப்பகுதியின் உள்ளடக்கங்களை கிரகித்து வாசிப்பார்.
- வாசித்த பகுதியை விளங்கிக் கூறுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- இராமாயணக் கதையைச் சுருக்கமாகக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள், தமக்குத் தெரிந்த இராமாயணச் சம்பவங்களைக் கூறுவதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உரைப்பகுதியை விருப்பத்துடன் வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தனியாகவோ / குழுவாகவோ வாசிப்பதற்கு வசதியளியுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | |
|---|---|---|
| காடு - කැලෑව | கருணை - කරුණාව | பறத்தல் - ඉගිලීම |
| ஆகாயம் - අහස | ஒளி - ආලෝකය | அழித்தல் - විනාශකිරීම |
| கதை - කතන්දරය | வாழ்க்கை - ජීවිතය | இலங்கை - ලංකාව |
| சீதை - සීදයි (සීතා කුමරිය) | இருள் - අඳුර | சிறை - සිරගෙදර |
| இராமன் - ඉරාමන්(රාම කුමරු) | அனுமான் - අනුමාන් (හනුමා) | உயிர் - පණ |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- இராமாயணக் கதை அடங்கிய வீடியோ
- ஓடியோக் காட்சி
- பாடநூல்
- படங்கள்
- இலங்கை இந்திய வரைபடங்கள்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

### இராமாயணச் சம்பவத்தின் சுருக்கம்.

இராமனின் மனைவி சீதையை இலங்கை மன்னனான இராவணன் புஷ்பக விமானத்தில் கவர்ந்து கொண்டு இலங்கைக்கு வந்தான். சீதையைத் தேடி, அனுமானின் உதவியுடன் இராமர் இலங்கைக்கு வந்தார். இராமர், இராவணனுடன் யுத்தம் புரிந்து சிறை வைக்கப்பட்டிருந்த சீதையை மீட்டுச் சென்றார்.

### வாக்கிய அமைப்பு.

இலங்கைக்கு வந்தான் - ලංකාවට ආවේ ය
கோயிலுக்குச் சென்றான் - කෝවිලට ගියේ ය
கடவுளுக்குப் படைத்தார்கள் - දෙවියන්ට පූජා කළෝ ය
வீடுகளுக்குச் சென்றார்கள் - නිවෙස්වලට ගියෝ ය
நண்பர்களுக்கு கொடுத்தார்கள் - මිතුරන්ට දුන්නෝ ය

## மேலதிகச் செயற்பாடு.

### புதுவருடப் பிறப்பு.

தமிழ் சிங்களப் புதுவருடம் ஏப்பிரல் மாதம் 14 ஆந் திகதி இலங்கையில் வெகு குதூகலமாகக் கொண்டாடப்படுகிறது. தமிழர்கள் புதுவருடத்தினத்தன்று மருத்து நீர் வைத்து நீராடி புத்தாடை அணிந்து கோயிலுக்குச் சென்று வழிபாடுகள் செய்வர்.

அதன் பின்னர் பொங்கல் பொங்கி கடவுளுக்குப் படைத்து உறவினர்களுடனும் நண்பர்களுடனும் பகிர்ந்து உண்பர். அன்றைய தினம் பயிற்றம் பலகாரம், அரியதரம், முறுக்கு, வடை போன்ற பலகாரங்களைப் பகிர்ந்து கொள்வர். சுப நேரத்தில் உறவினர் வீடுகளிற்குச் சென்று, தமது உறவு முறைகளை வளர்த்துக் கொள்வர்.

சுபநேரத்தில் கைவிசேடங்களைப் பெரியவர்களிடமிருந்து பெற்றுக் கொள்வர். சுப நேரத்தில் சுபகாரியங்கைளயும் தொழில்களையும் தொடங்குவர். தொடர்ந்து புத்தாண்டுக் கொண்டாட்டங்களில் ஈடுபடுவர். இங்கு பாரம்பரிய விளையாட்டுக்கள், நிகழ்வுகள் இடம்பெறும். விசேடமாக வண்டில் சவாரி, கிளித்தட்டு, கிட்டிப் புல்லு, போர்த்தேங்காய் அடித்தல், கிடுகு பின்னுதல் போன்ற போட்டி நிகழ்வுகளை மக்கள் இணைந்து நடாத்தி மகிழ்வர்.

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- குறித்த பகுதியை உரத்து வாசித்துக் காட்டுவார்.
- உரைப்பகுதியில் பிரதான கருத்தைச் சுருக்கமாகக் கூறுவார்.
- ஏனைய மாணவருடன் வாசித்த பகுதி பற்றிக் கலந்துரையாடுவார்.
- கதையில் வரும் விழுமியக் கருத்துக்களைக் கூறுவார்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர் களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.3** : அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம் :** வைத்தியர் வழங்கும் அறிவுறுத்தல்கள்.

**பாடவேளை** : 03

## கற்றற் பேறுகள் :

- அறிவுறுத்தல்களுக்கு ஏற்பச் செயற்படுவார்.
- அறிவுறுத்தல்களில் வரும் புதிய சொற்களை விருப்பத்துடன் வாசிப்பார்.
- வைத்தியரினால் எழுதி வழங்கப்படும் அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார்.
- வேறு அறிவுறுத்தல்களை விளங்கி வாசிப்பார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- அறிவுறுத்தல்களைக் காட்சிப்படுத்தி, வாசித்துக் காட்டுங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் வாசிப்பதற்கு வாய்ப்பளியுங்கள்.
- மாணவர்கள் குழுவாக இயங்கி வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- விளையாட்டு மூலம் பாடநூலிலுள்ள அறிவுறுத்தல்களை வாசித்துச் செயற்பட வசதி செய்யுங்கள்.
- மாணவர் இடருறும் போது உதவி அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

வைத்தியசாலை - රෝහල
மருந்து - බෙහෙත්
மாத்திரை - පෙති
விருப்பம் - කැමති
காலை - උදේ
மாலை - සවස
இரவு - රාත්‍රි
பாதுகாப்பாக - පරිසමෙන්
வையுங்கள் - තියන්න
குடியுங்கள் - බොන්න
தவிர்க்கவும் - වලකින්න
மூன்று நேரம் - තුන් වේලක්

குப்பைகளை இங்கே போட வேண்டாம் - කැළි කසල මෙහි දමන්න එපා
வெற்றிலை சாப்பிட வேண்டாம் - බුලත් කන්න එපා
புகைத்தல் தடை - දුම් බීම තහනම්
வலப்பக்கமாகச் செல்லவும் - දකුණු පසින් ගමන් කරන්න

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- சொல் அட்டைகள்
- படங்களுடனான அறிவுறுத்தல்கள்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள் :**

நோயாளி : வணக்கம் ஐயா!
வைத்தியர் : வணக்கம், கதிரையில் அமருங்கள்.
நோயாளி : கண்பரிசோதிக்கும் அட்டையை வாசித்தல்.

E E E E E E E
E E E E E E E
E E E E E E E
E E E E E E E
E E E E E E E

(கண்பரிசோதனை அட்டையை பயன்படுத்துவது சிறந்தது.)

## வாக்கிய அமைப்பு.

| | |
|---|---|
| மேசையில் கண்ணாடி | - මේසයේ කණ්ණාඩියක් |
| வைத்தியசாலையில் நேயாளிகள் | - රෝහලේ රෝගියෝ |
| குப்பையில் கிருமிகள் | - කසළවල ශුද්‍රජීවීන් |
| கண்ணில் தூசு | - ඇසේ දූවිලි |
| வலதுபக்கத்தில் கடை | - දකුණු පසින් කඩයක් |
| கதிரையில் இருங்கள் | - පුටුවේ වාඩිවෙන්න |
| உணவில் போசாக்கு | - කෑමවල පෝෂණය |
| அறிவுறுத்தல்களில் கவனஞ் செலுத்துங்கள் | - උපදේස්වලට අවධානය යොමුකරන්න |
| ஆற்றில் மீன்கள் | - ගගේ මාලුවෝ |
| அலுமாரியில் வையுங்கள் | - අල්මාරියේ තියන්න |

## கணிப்பீடு மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- அறிவுறுத்தல்களைச் சரியாக வாசித்துக் காட்டுவார்.
- புதிய சொற்களை இனங்கண்டு கூறுவார்.
- அறிவுறுத்தல்களை ஏற்று நடக்க வேண்டும் என்பதைக் கூறுவார்.
- வைத்தியர், நோயாளி பாத்திரமேற்று, அறிவுறுத்தல்களை வாசித்துச் செயற்படுவார்.

**தேர்ச்சி 3.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து வாசிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 3.4** : கட்புல, செவிப்புல சாதனங்களில் தகவல்களைப் பார்த்து விளங்கி வாசிப்பார்.

**விடய உள்ளடக்கம்** : பத்திரிகைகளில் இடம் பெறும் தலைப்புச் செய்திகள்.

**பாடவேளை** : 03

**கற்றற் பேறுகள் :**

- கட்புல, செவிப்புல சாதனங்களையும் அவற்றிலிருந்து தகவல்களைப் பெறும் வழிகளையும் கூறுவார்.
- தகவல்களை / தலைப்புச் செய்திகளை விளங்கி வாசிப்பார்.
- அன்றாடம் பத்திரிகைச் செய்திகளை ஆர்வத்தோடு விளங்கி வாசிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:**

- கட்புல, செவிப்புல சாதனங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றில் நாம் பெறும் தகவல்கள் / செய்திகள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.
- பாடப்பகுதியிலுள்ள பத்திரிகைச் செய்திகளை விளங்கி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர் இடருறும் போது உதவி அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு, மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:**

| | |
|---|---|
| பிரதான செய்திகள் - ප්‍රධාන පුවත් | நடைபெறும் - පැවෙත්වන |
| தலைப்புச் செய்திகள் - ශීර්ෂ පාඨ | அன்றாடம் - දිනපතා |
| வானொலி - ගුවන්විදුලිය | தொலைக்காட்சி - රූපවාහිනිය |
| தொலைபேசி - දුරකථනය | முகப்புத்தகம் - මුහුණු පොත |
| மின்னஞ்சல் - විද්‍යුත් තැපැල | மதிப்பீடு - ඇගයීම |
| உள்நாடு - දේශීය | வெளிநாடு - විදේශීය |

**இன்று இடியுடன் கூடிய மழை பெய்யும்.**

අද අකුණු ගසමින් වැසි වසී.

**அமெரிக்க சனாதிபதி இந்தியா விஜயம்.**

අමෙරිකානු ජනපතිතුමා ඉන්දියාවේ සංචාරයෙක්.

**மூவின மக்களும் ஒற்றுமையாக வாழ்வோம்.**

ජාතින් තුනම සමගියේන් ජීවත් වෙමු.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- பாடநூல்
- கட்புல, செவிப்புல சாதனங்கள்
- வாக்கிய அட்டைகள்

## பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள் :

பத்திரிகைத் தலைப்புச் செய்திகளைப் பிரதி செய்து / தலைப்புச் செய்திகளை வெட்டி எடுத்துக் காட்சிப்படுத்துங்கள்.

### வாக்கிய அமைப்பு.

| | |
|---|---|
| மணவர்களது திறமைகள் | - ශිෂ්‍යන්ගේ හැකියාව |
| பாடசாலையினது முன்னேற்றம் | - පාසලේ සංවර්ධනය |
| பத்திரிகைகளினது தலைப்புச் செய்திகள் | - පුවත්පත්වල සිරස්තල |
| தலைவர்களினது ஆற்றல்கள் | - නායකයින්ගේ නිපුණත්වය |
| ஊடகங்களினது பொறுப்புக்கள் | - මාධ්‍යවල වගකීම |

## கணிப்பீடு மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- தொடர்புச் சாதனங்களை வகைப்படுத்துவார்.
- செய்திகளைச் சரளமாக விளங்கி வாசிப்பார்.
- தலைப்புச் செய்திகளை வாசிப்பதற்காக முன்வருவார்.
- வேறு ஊடகத் தகவல்களை விளங்கி வாசிப்பார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம்** 4.1 : விபரங்கள் உள்ளடங்கிய பந்திகளை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : மரங்களை நடுவோம் பயன் பெறுவோம். ( கட்டுரை )

**பாடவேளை** : 4

## கற்றற் பேறுகள்:

- வாக்கிய இயைபுடன் வாக்கியங்களை எழுதிக் காட்டுவார்.
- சரியான வாக்கியங்களைப் பந்தியாக விரித்தெழுதுவார்.
- உரிய தகவல்களை உள்ளடக்கிய பந்திகளை எழுதுவார்.
- பாடலிலிருந்து வாக்கியங்களை உருவாக்குவார்.
- பந்திகள் கொண்ட கட்டுரை எழுதுவார்.
- தலைப்பிற்கு ஏற்ப எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- சொல்லட்டைகளைக் காட்சிப்படுத்தி, வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள்.
- சிறிய சிறிய பந்திகளை உருவாக்க வசதி செய்யுங்கள்.
- பந்திகளை விரித்தெழுதுதல் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்கள் இடருறும் போது உதவுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | |
|---|---|
| காற்று - සුළඟ | வித்து - ඇටය |
| காய் - අමු ගෙඩිය | கனி - ඉදිච්ච ගෙඩිය |
| மழை - වැස්ස | நிலம் - පොළව |
| உரம் - පොහොර | மருந்து - බෙහෙත |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- சொல் அட்டைகள்
- எழுதுதாள், எழுது கருவிகள்
- பாடநூல்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

## மரம் வளர்ப்போம்.

மரங்கள் நாட்டின் வளமாம் மண்ணில் நட்டால் நலமாம்.

கண்ணுக்குக் குளிர்ச்சி தந்திடுமாம் காயும் கனியும் கொடுத்திடுமாம்.

மருந்து செய்ய உதவிடுமாம் மக்கள் நலமும் காத்திடுமாம்.

நீரைத் தேக்கி வைத்திடுமாம் நிலத்தை உறுதியாய்ச் செய்திடுமாம்.

மழையும் மரத்தால் பெய்திடுமாம் தழையும் உரமாய் மாறிடுமாம்.

அடுப்பும் எரிக்க உதவிடுமாம் ஆற்றின் கரையைக் காத்திடுமாம்.

நூதனம் மிக்க மரங்களெல்லாம் நூறு வருடம் வாழ்ந்திடுமாம்.

ஆதலால் வளர்ப்போம் மாந்தரே ஆளுக்கொன்றாய் மரங்களையே!

## மரங்கள்.

மரங்கள் எமது சுற்றாடலுக்கு பசுமையைத் தருகின்றன. சிறிய தாவரங்கள் செடிகள் எனப்படும். பெரிய தாவரங்கள் மரங்கள் எனப்படும். மரங்கள் எமக்குத் தூய்மையான காற்றையும் நிழலையும் தருகின்றன. மரங்கள் மழை பெய்வதற்கு உதவுகின்றன. மா, பலா, வாழை போன்றன உணவிற்காக காய் பழங்களைத் தருகின்றன. பல மரங்களின் வேர், பட்டை, இலை, பூ, காய், வித்து முதலியன மருந்தாகவும் பயன்படுகின்றன. மரங்கள் தளபாடங்கள், வாகனங்கள் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் பயன்படுகின்றன.

01. மரங்கள் சுற்றாடலுக்கு எவற்றைத் தருகின்றன?
02. சிறிய தாவரங்கள் எவ்வாறு அழைக்கப்படும்?
03. மரங்கள் என்று எவற்றைக் கூறுவர்?
04. மரங்களினால் பெறப்படும் பயன்கள் எவை?

## வாக்கிய அமைப்பு.

மரத்தில் காய்கள் - ගසින් ගෙඩි
கண்ணில் கண்ணீர் - ඇසින් කඳුලු
பழத்தில் சுவை - පළතුරේ රස
மலையின்கண் ஊற்று - කන්දේ ඇති උල්පත
பத்திரிகையின் தலைப்புச் செய்தி- පුවත්පත්වල සිරස්තල

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- வாக்கியங்களைச் சரியான வகையில் எழுதுவார்.
- வாக்கியங்களைப் பந்தியாக விரித்தெழுதுவார்.
- பந்தியமைப்பில் புதிய புதிய சொற்களைப் பயன்படுத்துவார்.
- தலைப்பிற்கு ஏற்ப பந்திகளைச் சுயமாக ஆக்குவார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர் களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : விபரமான, ஆக்கபூர்வமான பந்திகளை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்:** சுற்றுலாப் பயணத்தின் போது கண்டுகளித்த ஓர் இடம் பற்றிய விபரம். (மிருகக் காட்சிச்சாலை)

**பாடவேளை** : 04

### கற்றற் பேறுகள்:

- குறித்த தலைப்பில் கொடுக்கப்பட்ட சொற்களின் உதவியுடன் வாக்கியங்களை எழுதுவார்.
- குறித்த தலைப்பில் வாக்கியங்களை இணைத்துப் பந்திகளை எழுதுவார்.
- உரிய தகவல்களை உள்ளடக்கி விபரமாக எழுதுவார்.
- படிமுறை வளர்ச்சியில் பந்திகளை ஒழுங்குடன் எழுதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- குறித்த தலைப்புகளைக் காட்சிப்படுத்தி சில சொற்களையும் வழங்கிப் பந்தியொன்றை எழுதுவதற்கு வழிகாட்டுங்கள்.
- புள்ளி விபரங்கள், உதாரணங்கள், எடுத்துக்காட்டுக்கள் கொண்ட பந்திகளை எழுத உதவுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவுக்கும் தலைப்புக்கள் வழங்கி வாக்கியங்களை எழுதவும் விபரமான பந்திகளை உருவாக்கவும் வசதி செய்யுங்கள்.
- உருவாக்கிய விபரமான பந்திகளை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| மிருகக்காட்சிச்சாலை | - සත්තුවත්ත | விலங்குகள் | - සතුන් |
| பறவைகள் | - පක්ෂින් | பரந்த இடம் | - පැතිරුණු ප්‍රදේශය |
| மீன்கள் | - මාලු | விபரம் | - විස්තරය |
| விரைவாக | - වේගයෙන් | காற்று | - සුළඟ |
| பந்திகள் | - ඡේද | சுற்றுலா | - චාරිකාව |
| கட்டுரை | - රචනාව | பயணம் | - ගමන |
| தலைப்பு | - මාතෘකාව | உடல் | - ශරීරය |

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- தலைப்பு அட்டைகள்
- பாடநூல்
- செயலட்டைகள்
- டிமைட் தாள்கள்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

### மீன்தொட்டி.

மீன்தொட்டியை வீட்டில் வைக்கும் போது இடையூறு இல்லாத இடத்தில் வைக்க வேண்டும். மீன் தொட்டியைக் கீழே வைக்க முடியாது. உயரமான இடத்தில் தான் வைக்க வேண்டும். வெப்ப நிலையைச் சீராக வைத்துக்கொள்ள நம் உடலினால் முடியும். ஆனால், மீன்களால் முடியாது. எனவே, மீன் தொட்டியை வைக்கும் இடம் வெளிச்சமும் காற்றோட்டமும் உள்ள இடமாக இருத்தல் வேண்டும்.

### மிருகக் காட்சிச்சாலை.

அப்பா என்னை அழைத்துச் சென்றார் அங்கு ஓர் இடம்
அங்கிருந்த குயிலும் மயிலும் ஆடித் திரிந்தன.
பொல்லா நரியும் புனுகுப் பூனையும் எல்லாம் நின்றன.
குட்டி மான்கள் ஒட்டகச் சிவிங்கி கூட இருந்தன.

குரங்கு என்னைப் பார்த்துப் பார்த்து குறு குறு என்றது.
யானை ஒன்று காதைக் காதை ஆட்டி நின்றது.
முதலை தலையைத் தூக்கிப் பார்த்து மூச்சு விட்டது.
கரடி கூட உறுமிக் கொண்டே காலைத் தூக்கிற்று.

சிறுத்தை ஒன்று கோபத்தோடு சீறிப் பார்த்தது.
அங்கு எங்கள் அருகிலேயே சிங்கம் நின்றது.
கரடி சிங்கம் புலியைக் கண்டேன் கண்டும் பயமில்லை.
சூரனைப் போல் நின்றிருந்தேன் துளியும் பயமில்லை.

சென்ற அந்த இடம் உனக்குத் தெரியவில்லையா?
மிருகக்காட்சிச் சாலை தானே! வேறொன்றுமில்லை.

- அழ.வள்ளியப்பா.

### வாக்கிய அமைப்பு.

| | |
|---|---|
| ஆகா! அழகான பறவை | - හා! හා! කොච්චර ලස්සන පක්ෂියා |
| குயிலே! பாடு | - කොහෝ! ගයන්න |
| மயிலே! ஆடு | - මොනරෝ! නටන්න |
| என்னே! அழகு | - කොච්චර! ලස්සන |
| என்னே உயரம்! | - කොපමණ! උස |

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- குழுவாகவும் தனியாகவும் எழுதுவார்.
- குறித்த தலைப்பின் பந்தியினை உருவாக்குவார்.
- சுயமாகத் தலைப்புகளைத் தயாரித்து பந்திகளை எழுதுவார்.
- சுற்றுலாப் பயணத்தில் கண்டுகளித்த விடயங்கள் பற்றி பந்திகளை உருவாக்குவார்.
- முன்வைக்கும் பந்திகளில் படிமுறை ஒழுங்குகளைப் பேணுவார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய அறிமுகமான, அறிமுகமற்ற சொற்கள், சொற்றொடர் களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3** : கடிதங்களை எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்** : மிருகக் காட்சிசாலையைப் பார்வையிட அனுமதி கோரி எழுதும் கடிதம்.

**பாடவேளை** : 04

### கற்றற் பேறுகள்:

- தொழில் முறைக் கடித உறுப்புகளை எழுதிக் காட்டுவார்.
- தொழில் முறைக் கடித அமைப்பை இனங்காண முயற்சிப்பார்.
- தொழில் முறைக் கடித அமைப்பைப் பின்பற்றி கடிதமொன்று எழுதுவார்.
- உரிய தகவல்களை உள்ளடக்கி கடிதம் எழுதுவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- தொழில் முறைக் கடித உறுப்புகளைக் காட்சிப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாகவோ / தனியாகவோ தொழில் முறைக் கடிதம் எழுத வழிப் படுத்துங்கள்.
- மாணவர்கள் எழுதிய கடிதத்தை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மீண்டும் தொழில் முறைக் கடிதம் பற்றிக் கலந்துரையாடி இடருறும் மாணவர்களுக்கு உதவுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:




01. அனுப்புபவர் பெயர், அனுப்புபவர் முகவரி, திகதி.
02. பெறுநர் பதவி / பெறுநர் பெயர், பெறுநர் முகவரி.
03. விளிப்பு.
04. தலைப்பு.
05. விடயம் / உள்ளடக்கம் / செய்தி.
06. நன்றி.
07. ஒப்பம், பெயர்.

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- காட்சிப் படங்கள்
- மாதிரிக் கடிதங்கள்
- பாடநூல்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்.**

பெயர், முகவரி, திகதி
නම, ලිපිනය, දිනය

பெறுநர் முகவரி
ලබන්නාගේ ලිපිනය

விளிப்பு - ආමන්ත්‍රණය

தலைப்பு - මාතෘකාව

விடயம், உள்ளடக்கம், செய்தி
තොරතුරු, අන්තර්ගතය, ප්‍රවෘත්ති

நன்றி - ස්තූතියි

ஒப்பம், பெயர் - අත්සන,නම

அதிபர்,
பொ/ரஜரட்டை வித்தியாலயம்,
பொலனறுவை.
2015.01.13.

பணிப்பாளர்,
மிருகக் காட்சிச்சாலை,
தெகிவளை.
ஐயா,

மிருகக் காட்சிசாலையைப் பார்வையிடுவதற்கான அனுமதி கோரல்.

எமது பாடசாலையின் 100 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் வரும் முதலாம் தவணை விடுமுறைக் காலத்தில் மிருகக் காட்சிச்சாலையைப் பார்வையிட விரும்புகின்றனர். எனவே, இதற்காகப் பொருத்தமான திகதி ஒன்றினைத் தெரிவு செய்து தருமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். தங்கள் ஒத்துழைப்பு உயர்வாக மதிக்கப்படுகிறது.

நன்றி.

இப்படிக்கு.
உண்மையுள்ள,
அ.அன்பு. (அதிபர்)

### சொற்களஞ்சியம்.

முகவரி - ලිපිනය
பெயர் - නම
நன்றி - ස්තුතියි
தயவு செய்து - කරුණාකර
மன்னிக்கவும் - සමාවන්න
சுற்றுலா - චාරිකාව
அதிசயம் - පුදුම
மிருகக் காட்சிச்சாலை - සත්තු වත්ත
பறவைகள் - පක්ෂීන්

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- தொழில்முறைக் கடித உறுப்புக்களை ஒழுங்கு முறையில் காட்சிப்படுத்துவார்.
- தொழில்முறைக் கடித உள்ளடக்கங்களை கலந்துரையாடுவார்.
- மிருகக் காட்சிச் சாலையைப் பார்வையிட அனுமதி கோரி கடிதம் எழுதுவார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4** : தகவல்கள் உள்ளடங்கிய சொற்றொடர்களையும் பந்திகளையும் எழுதுவார்.

**விடய உள்ளடக்கம்:** துண்டுப் பிரசுரம்.

**பாடவேளை** : 04

## கற்றற் பேறுகள்:

- தகவல்கள் கொண்ட வாக்கியங்களை எழுதுவார்.
- தகவல்கள் கொண்ட பந்திகளை எழுதுவார்.
- துண்டுப் பிரசுர அமைப்பினைக் குறித்துக் காட்டுவார்.
- குறித்த தகவல்களைப் பெற்றுக் கொண்டு துண்டுப் பிரசுரம் ஒன்றை எழுதுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- மாதிரித் துண்டுப் பிரசுரங்களைக் காட்சிப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
- துண்டுப் பிரசுர அமைப்பு பற்றியும், உள்ளடக்கங்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- குழுவாகவோ தனியாகவோ துண்டுப் பிரசுரமொன்றை எழுத வழிப்படுத்துங்கள்.
- துண்டுப் பிரசுர அமைப்பைப் பின்பற்றி விபரமாக கவரும் வகையில் எழுத வழிகாட்டுங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

## முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

| | | | |
|---|---|---|---|
| கல்வி | - අධ්‍යාපනය | விளிப்பு | - ආමන්ත්‍රණය |
| நன்மை | - යහපත | தலைப்பு | - මාතෘකා |
| தீமை | - අයහපත | விடயம் | - විෂය |
| அனைவரும் | - සියල්ලෝම | மாணவர்கள் | - ශිෂ්‍යයෝ |
| பெற்றார்கள் | - ලබාගත්තෝය | பாடசாலை | - පාසල |
| நிறுவனங்கள் | - ආයතන | | |

## தரவிருத்தி உள்ளீடுகள்:

- மாதிரித் துண்டுப் பிரசுரம்
- துண்டுப் பிரசுர அமைப்பு அட்டைகள்
- பாடநூல்

**பயிற்சி பெறுவதற்காகப் பயன்படுத்துங்கள்**




(1) தலைப்பு

(2) விளிப்பு

(3) விடயம், செய்தி, உள்ளடக்கம்

(4) நன்றி

(5) திகதி

(6) பெயர், முகவரி

---

வீதி விபத்துக்களைத் தவிர்ப்போம்.

அன்பான பொதுமக்களே!

அண்மைக் காலமாக வீதி விபத்துக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன. பாடசாலை மாணவர்கள் இவ் வீதி விபத்துக்களில் பாதிப்படைகின்றனர். இவ்வாறான செய்திகளை நாள்தோறும் பத்திரிகைகளில் பார்க்க முடிகிறது.

- வேகமான வாழ்க்கை முறைகள்.
- புதிய அதிவேகப் பாதைகள்.
- நேரத்தை மீதப்படுத்துவதற்காக வேகமாகச் செயற்படுதல்.
- அலட்சிய மனப்பாங்கு.
- கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக்கொண்டு வாகனம் செலுத்துதல்,
- வீதியில் நடத்தல்.
- மது போதையில் வாகனம் செலுத்துதல், வீதியில் நடத்தல்.
- தலைமை ஒளி விளக்கினால் (Head light) (ප්‍රධාන විදුලි පහන) முன்னால் வருபவரின் பார்வையை இடையூறு செய்தல்

‘‘வீதி விதிகளைப் பின்பற்றுவோம்’’

2015.01.20.

வீதிப் போக்குவரத்து அமைச்சு,
கொழும்பு.

### இறந்த கால வாக்கிய அமைப்பு - අතීත කාල වාක්‍ය.

துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டன
- අත්පත්‍රිකාව එලි දැක්විය

வாகனம் வேகமாகச் சென்றது
- වාගනය වේගයෙන් ගියේ ය

வீதி விபத்துக்கள் அதிகரித்துள்ளன
- මාර්ග අනතුරු වැඩිවිය

மாணவர்கள் பாதிப்புற்றனர்
- සිසුහු අනතුරට පත්වූ හ

அதிவேகப் பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன
- අධි වේගි මාර්ග ඉදිවිය

### நிகழ் கால வாக்கிய அமைப்பு - වර්තමාන කාල වාක්‍ය.

துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படுகின்றன
- අත්පත්‍රිකාව එලි දක්වයි

வாகனம் வேகமாகச் செல்கிறது
- වාගනය වේගයෙන් යයි

வீதி விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன
- මාර්ග අනතුරු වැඩිවෙයි

மாணவர்கள் பாதிப்படைகிறார்கள்
- සිසුහු අනතුරට පත්වෙති

அதிவேகப் பாதைகள் அமைக்கப்படுகின்றன
- අධි වේගි මාර්ග ඉදිවෙයි

### எதிர் கால வாக்கிய அமைப்பு - අනාගත කාල වාක්‍ය.

துண்டுப் பிரசுரங்கள் வெளியிடப்படும்
- අත්පත්‍රිකාව එලි දක්වන්නේ ය

வாகனம் வேகமாகச் செல்லும்
- වාගනය වේගයෙන් යන්නේ ය

வீதி விபத்துக்கள் அதிகரிக்கும்
- මාර්ග අනතුරු වැඩිවන්නේ ය

மாணவர்கள் பாதிப்புறுவர்
- සිසුන් අනතුරට පත්වන්නෝ ය

அதிவேகப் பாதைகள் அமைக்கப்பட்டும்
- අධි වේගි මාර්ග ඉදිවෙන්නේ ය

## கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- துண்டுப் பிரசுர அமைப்பினை / உறுப்புகளை முன்வைப்பார்.
- துண்டுப் பிரசுர அமைப்பினை / உறுப்புகளை எழுதிக் காட்டுவார்.
- மாதிரித் துண்டுப் பிரசுரத்தின் உறுப்புகள், உள்ளடக்கங்கள் பற்றி கலந்துரையாடுவார்.
- துண்டுப் பிரசுரமொன்றை குறித்த தலைப்பின் கீழ் எழுதுவார்.

**தேர்ச்சி 4.0** : நாளாந்த தேவைகளுக்காக வெவ்வேறு சந்தர்ப்பங்களில் உரையாடிய சொற்கள், சொற்றொடர்களில் உள்ள முக்கியமான விடயங்களைக் கிரகித்து எழுதுவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5** : விண்ணப்பப் படிவங்களைப் பூரணப்படுத்துவார்.

**விடய உள்ளடக்கம்:** தொழில் தொடர்பான விண்ணப்பப் படிவம் நிரப்புதல்.

**பாடவேளை** : 04

### கற்றற் பேறுகள்:

- சிறிய விண்ணப்பப் படிவங்களை சரியாக நிரப்புவார்.
- விண்ணப்பப் படிவங்களை நிரப்புவது தொடர்பில் விருப்புக் கொள்வார்.
- தொழில் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை சரியாக நிரப்புவார்.
- வேறு விண்ணப்பப் படிவங்களை விளங்கி, பிழையின்றி நிரப்புவார்.

### பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான ஆலோசனைகள்:

- மாணவர்களின் சுய விபர ஆலோசனைகள்.
- மாதிரி விண்ணப்பப் படிவங்களை காட்சிப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- மாணவர்களைக் குழுவாக விண்ணப்பப் படிவங்களை நிரப்புவதற்கு வசதி ஏற்படுத்துங்கள்.
- மாணவர் இடருறும் போது உதவி அவர்களை ஊக்கப்படுத்துங்கள்.
- பொருத்தமான கணிப்பீடு மதிப்பீடுகளை மேற்கொள்ளுங்கள்.

### முதன்மைப் பதங்கள் (Key words) / எண்ணக்கருக்கள்:

- முழுப்பெயர் - සම්පූර්ණ නම
- சொந்த முகவரி - පෞද්ගලික ලිපිනය
- தாய் பெயர் - මවගේ නම
- தந்தை பெயர் - පියාගේ නම
- திகதி - දිනය
- வங்கியின் பெயர் - බැංකුවේ නම
- விரும்பும் தொழில் - කැමතිම වෘත්තිය
- தொலைபேசி இலக்கம் - දුරකථන අංක
- கல்வித்தகைமை - අධ්‍යාපන සුදුසුකම්
- தொழிற் தகைமை - වෘත්තිය සුදුසුකම්
- வங்கிக்கணக்கு இலக்கம் - බැංකුවෙ ගිණුම් අංක
- கையொப்பம் - අත්සන

### தரவிருத்தி உள்ளீடுகள்:

- பொருத்தமான மாதிரி விண்ணப்பப் படிவங்கள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் தொடர்பான ஆலோசனைகள்:

- சுய விபரங்களைச் சரியாக எழுதிக் காட்டுவார்.
- சிறிய மாதிரி விண்ணப்பப் படிவங்களை நிரப்புவார்.
- தொழில் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தைக் குழுவாக நிரப்புவார்.
- தொழில் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தைச் சுயமாக திருத்தங்கள் இன்றி நிரப்பிக்காட்டுவார்.
- தெளிவான கையெழுத்தில் விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதன் முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவார்.

இலகுவான மாதிரி விண்ணப்பப் படிவம்

# <u>சுய விபரங்களைப் பதிவு செய்தல்.</u>

முழுப் பெயர் :-.............................................................................

முதலெழுத்துடன் பெயர்:-.....................................................................

முகவரி சொந்த :- ........................................................................

........................................................................

தொழில் :-.........................................................................

.........................................................................

மாவட்டம் :-.............................................................................

பிரதேச செயலாளர் பிரிவு :-.................................................................

பிறந்த திகதி :- வருடம்.....................மாதம்..............................திகதி................

வயது (2014.10.30) தினத்தில் வருடம்................மாதம்.................திகதி.............

தேசிய அடையாள அட்டை இலக்கம் :-........................................................

பால் :-...............................................................................

கல்வித் தகைமை :-.........................................................................

தொழில் தகைமை :-........................................................................

வேறு தகைமைகள் :-........................................................................

திகதி :-.......................... ....................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்